## காஞ்சிபுரம், செங்கல்பட்டு,கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள்

## இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## 12 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 10 X 1 = 10 | | |
|---|---|---|
| 1 | ஈ | காப்பு முதல் |
| 2 | ஆ | ₹. 700 |
| 3 | இ | பங்குமுதல் க/கு |
| 4 | ஈ | அழைக்கப்பட்ட தொகை |
| 5 | அ | முதல் தவணை |
| 6 | ஆ | 110 % |
| 7 | இ | 25 |
| 8 | அ | பணம்சாரா தகவல்கள் |
| 9 | ஆ | நடைமுறை முதல் |
| 10 | ஆ | ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய |

### பகுதி — II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 2 = 10

11. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளை பட்டியலிடவும்.

1) ஒப்பீட்டு அறிக்கை 2) பொது அளவு அறிக்கை 3) போக்குப் பகுப்பாய்வு
4) நிதி ஓட்டப்பகுப்பாய்வு 5) ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு

12 சிறுகுறிப்பு வரைக - காப்பு முதல்

- ஒரு நிறுமம் அதன் கலைப்பின்போது மட்டும், அழைப்பு விடுக்கலாம் என ஒதுக்கி வைத்துள்ள, ஒப்பிய முதலின் ஒரு பகுதியினை 'காப்பு முதல்' என்று அழைக்கலாம்.

13. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?

- பங்குதாரர் ஒருவர், ஒதுக்கீட்டு பணத்தையோ அல்லது அழைப்புப் பணத்தையோ செலுத்தத் தவறினால், அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும்.

14 குறிப்பேட்டுப்பதிவு

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப<br>பங்கு விண்ணப்ப க/கு<br>( ஒன்றுறு₹.2 வீதம் விண்ணப்பத் தொகை பெற்றது ) | | 2,00,000 | 2,00,000 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

15 குறிப்பேட்டுப்பதிவு

| விவரம் | | பற்று | வரவு |
|---|---|---|---|
| நேர்மை பங்கு ஒதுக்கீட்டு க/கு ப<br>நேர்மை பங்கு முதல் க/கு | | XXX | XXX |
| வங்கி க/கு ப<br>நேர்மை பங்கு ஒதுக்கீட்டு க/கு | | XXX | XXX |

16. மேரி வரையறு நிறுமத்தின் 2016 மார்ச் 31 மற்றும் 2017 மாரச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஒப்புநோக்கும் ஆண்டுக்குரிய வருமான அறிக்கை

| விவரம் | 2015 - 2016 | 2016 - 2017 | தொகையின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) | சதவீதத்தின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) |
|---|---|---|---|---|
| | ₹. | ₹. | ₹. | |
| விற்பனை மூலம் வருவாய் | 4,00,000 | 5,00,000 | + 1,00,000 | + 25 |
| கழிக்க :இயக்கச் செலவுகள் | 2,00,000 | 1,80,000 | - 20,000 | - 10 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 2,00,000 | 3,20,000 | + 1,20,000 | + 60 |
| கழிக்க : வருமான வரி | 40,000 | 1,60,000 | + 1,20,000 | + 300 |
| வரிக்கு பின்னர் உள்ள இலாபம் | 1,60,000 | 1,60,000 | --- | ---- |

17. ராதா வரையறு நிறுமத்தின் 2017 மாரச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பொது அளவு வருமான அறிக்கை

| விவரம் | தொகை | விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம் |
|---|---|---|
| | ₹. | |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,50,000 | 100 |
| கூட்டுக : இதர வருமானம் | 67,500 | 15 |
| மொத்த வருவாய் | 5,17,500 | 115 |
| கழிக்க : செலவுகள் | 1,35,000 | 30 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 3,82,500 | 85 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 3 = 15

**18. நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றினை விளக்கவும்.**

1) பணம் சாராத தகவல்கள் இல்லாமை:
- பணம் சாரா தகவல்களும், வியாபார முடிவெடுத்தலுக்கு முக்கியமானதாகும். எடுத்துக்காட்டாக, பணியாளர்களின் திறமை, மேலாண்மையின் திறமை போன்றவை.
- ஆனால், இவை நிதிநிலை அறிக்கைகளில் இடம் பெறுவதில்லை.

2) கடந்த கால விவரங்களின் பதிவேடு:
- நிதிநிலை அறிக்கைகள் கடந்தகால விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.
- எனவே, அவை நடப்பு நிலைமையை வெளிப்படுத்தாமல் போகலாம்.

3) விலை நிலை மாற்றங்களை பொருட்படுத்துவதில்லை:
- விலை நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள், நிதிநிலை அறிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுவது இல்லை.
- எனவே, அவை நடப்பு நிலைமையை வெளிப்படுத்தாமல் போகலாம்.

4) நிலைத்தன்மை குறைவு:
- பல்வேறு நிறுவனங்கள், பல்வேறு கணக்கியல் முறைகளை பின்பற்றுகின்றன.
- எனவே, இரண்டு தொழிலமைப்புகளை ஒப்பீடு செய்வது கடினமாகும்.

5) புறப் பயனீட்டாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட தகவல்கள்:
- புறப்பயனீட்டாளர்கள் அணுகல் வரையறுக்கப்பட்டுள்ளதால் அவர்கள், முழுமையான தொடர்ச்சியான நிதிநிலை முடிவுகளைப் பெறமுடியாது.

6) தனிப்பட்ட முடிவுகளினால் பாதிக்கப்படுகிறது:
- நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பு என்பது, தனிநபரின் முடிவுக்குட்பட்டது.
- எனவே, இவை ஒருதலை பட்சமானதாக இருக்கலாம்.

**19. ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறு குறிப்பு வரையவும்.**
- ரொக்க ஓட்ட பகுப்பாய்வு என்பது, ரொக்க ஓட்ட அறிக்கை, தயாரிப்பதைக் குறிக்கும்.
- இது ஒரு குறிப்பிட்ட காலத்தில், உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகளை வெளிப்படுத்தும்.
- ரொக்கம் என்பது, கைரொக்கம் மற்றும் வங்கியில் உள்ள கேட்பு வைப்புகளை உள்ளடக்கியது.
- ரொக்கத்திற்கு சமமானவைகள் என்பது, குறுகிய காலத்தில் அதிக நட்டமில்லாமல் ரொக்கமாக மாற்றக்கூடிய, குறுகிய கால முதலீடுகளைக் குறிக்கும்.

**20. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன?**
- ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள், நிறுமத்தால் மறுவெளியீடு செய்யப்படலாம்.
- அப்பங்குகள், எந்த விலையிலும் மறுவெளியீடு செய்யலாம்.
- ஆனால், வெளியீட்டு விலை, ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளின் செலுத்தப் பெறாத தொகையைக் காட்டிலும் குறைவாக இருக்கக் கூடாது.



**21. சிறுகுறிப்பு வரைக - அங்கீகரிக்கப்பட்ட முதல்**
- இது அமைப்பு முறையேட்டின் படி அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆகும்.
- இது அதிகப்பட்சமாக முதலாக திரட்ட அனுமதிக்கப்பட்ட தொகை.
- இதனைப் ' பதிவு செய்யப்பட்ட முதல் ' அல்லது ' பெயரளவு முதல் ' என்றும் கூறலாம்.

**22.** குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | நேர்மை பங்கு முதல் க/கு ( 1,000 x 10 ) ப<br>நேர்மை பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு ( 1,000 x 3 )<br>நேர்மை பங்கு ஒறுப்பிழப்பு க/கு ( 1,000 x 7 )<br>( அழைப்பு பணம் செலுத்தாதல் 1,000 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன ) | | 10,000 | <br>3,000<br>7,000 |

**23.** சாரா நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 10,000 x 10 ) ப<br>நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | 1,00,000 | <br>1,00,000 |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( விண்ணப்பத் தொகை மாற்றப்பட்டது ) | | 1,00,000 | <br>1,00,000 |

(ii) பங்குகளை முனைமத்தில் வெளியிட்டால்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 10,000 x 12 ) ப<br>நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | 1,20,000 | <br>1,20,000 |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு ( 10,000 x 10 )<br>பத்திர முனைமம் க/கு ( 10,000 x 2 )<br>( விண்ணப்பத் தொகை மாற்றப்பட்டது ) | | 1,20,000 | <br>1,00,000<br>20,000 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

24. **மரியா வரையறு நிறுமத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய**

**பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு**

| | விவரம் | தொகை ₹. | மொத்த சொத்துக்களின் சதவீதம் |
|---|---|---|---|
| I. | பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| | பங்குதாரர் நிதி | 4,00,000 | 50 |
| | நீண்டகாலப் பொறுப்புகள் | 3,20,000 | 40 |
| | நடப்பு பொறுப்புகள் | 80,000 | 10 |
| | மொத்தம் | 8,00,000 | 100 |
| II. | சொத்துகள் | | |
| | நீண்டகாலச் சொத்துகள் | 6,00,000 | 75 |
| | நடப்புச் சொத்துகள் | 2,00,000 | 25 |
| | மொத்தம் | 8,00,000 | 100 |

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

25. அ) முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்.

| வ.எண் | முன்னுரிமைப் பங்குகள் | நேர்மைப் பங்குகள் |
|---|---|---|
| 1 | பிறவகையான பங்குகள் பெற்றிருக்கும் உரிமைகளை விட, சிலவற்றில் முன்னுரிமைப் பெற்றிருக்கும் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் எனப்படுகின்றன. | முன்னுரிமைப் பங்குகள் அல்லாத பங்குகள் நேர்மைப்பங்குகள் ஆகும் |
| 2 | நிறுமத்தின் வாழ்நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பங்காதாயம், இதில் பெறமுடியும். | இதில், பங்காதாயம் நிலையாக இருப்பதில்லை |
| 3 | நிறும கலைப்பின் போது, பங்குதாரர்களுக்கு முதலை திரும்ப செலுத்த வேண்டும் | நிறும கலைப்பின் போது, முன்னுரிமை பங்குதாரர்களுக்கு, முதலை திரும்ப செலுத்திய பிறகே, நேர்மை பங்குதாரார்களுக்கு செலுத்தப்படும். |

( அல்லது )





25. ஆ) ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்.

பத்தி 1 : இந்தப் பத்தியில் வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் உள்ள விவரங்கள் பதியப்படும்

பத்தி 2 : முதல் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

பத்தி 3 : இரண்டாம் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

பத்தி 4 : முதலாண்டு தொகைக்கும், இரண்டாமாண்டு தொகைக்கும் இடையேயான வேறுபாட்டினைக் காட்டவும். 2- ம் ஆண்டில் மதிப்பு அதிகரித்திருந்தால் கூட்டல் அடையாளமும், மதிப்பு குறைந்திருந்தால் கழித்தல் அடையாளமும் இடவேண்டும்.

பத்தி 5 : 4 - ஆம் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள தொகையினை, இரண்டாம் பத்தியில் (முதல் ஆண்டு தொகை) கொடுக்கப்பட்டுள்ள தொகையுடன் வகுத்து (கூடும் அல்லது குறையும் தொகை) 4 - ஆம் பத்தியின் தொகைக்கான கூடும் அல்லது குறையும் சதவீதத்தினைக் காட்டவும்.

$$\text{கூடும் அல்லது குறையும் சதவீதம்} = \frac{\text{கூடும் அல்லது குறையும் தொகை}}{\text{முதல் ஆண்டிற்கான தொகை}} \times 100$$

**ஒப்பு நோக்கு அறிக்கையின் படிவம்**

| விவரம் | ஆண்டு 1 | ஆண்டு 2 | தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–) | சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–) |
|---|---|---|---|---|
| | ₹ | ₹ | ₹ | |
| (1) | (2) | (3) | (4) | (5) |

26. அ) **சர்மிளா வரையறு நிறுமம் மற்றும் சங்கீதா வரையறு நிறுமத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளையபொது அளவு இருப்புநிலைக்குறிப்பு**

| | விவரம் | சர்மிளா நிறுமம் | | சங்கீதா நிறுமம் | |
|---|---|---|---|---|---|
| | | தொகை ₹. | மொத்த சொத்துக்களின் சதவீதம் | தொகை ₹. | மொத்த சொத்துக்களின் சதவீதம் |
| I. | பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | | |
| | பங்குதாரர் நிதி | 5,00,000 | 50 | 11,00,000 | 55 |
| | நீண்டகாலப் பொறுப்புகள் | 4,00,000 | 40 | 7,00,000 | 35 |
| | நடப்பு பொறுப்புகள் | 1,00,000 | 10 | 2,00,000 | 10 |
| | மொத்தம் | 10,00,000 | 100 | 20,00,000 | 100 |
| II. | சொத்துகள் | | | | |
| | நீண்டகாலச் சொத்துகள் | 6,50,000 | 65 | 18,00,000 | 90 |
| | நடப்புச் சொத்துகள் | 3,50,000 | 35 | 2,00,000 | 20 |
| | மொத்தம் | 10,00,000 | 100 | 20,00,000 | 100 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Trb Tnpsc.Com

( அல்லது )

26 ஆ) <u>கௌதம் வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.பு. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | நேர்மை பங்கு முதல் க/கு ( 500 x 10 ) ப<br>நேர்மை பங்கு இறுதி அழைப்பு க/கு ( 500 x 2 )<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு ( 500 x 8 )<br>( 500 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது ) | | 5,000 | 1,000<br>4,000 |
| | வங்கி க/கு ( 500 x 8 ) ப<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு ( 500 x 2 ) ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு ( 500 x 10 )<br>( ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டன ) | | 4,000<br>1,000 | 5,000 |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு ( 4,000 - 1,000 ) ப<br>முதலினக் காப்பு க/கு<br>( பங்கு ஒறுப்பிழப்பு கணக்கு முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 3,000 | 3,000 |

27. அ)

<u>தாய் நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.பு. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப<br>நேர்மை பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத்தொகை பெற்றது ) | | 5,00,000 | 5,00,000 |
| | நேர்மை பங்கு விண்ணப்ப க/கு ப<br>நேர்மை பங்கு முதல் க/கு<br>( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது ) | | 5,00,000 | 5,00,000 |
| | நேர்மை பங்கு ஒதுக்கீட்டு க/கு ப<br>நேர்மை பங்கு முதல் க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது ) | | 2,00,000 | 2,00,000 |
| | வங்கி க/கு ப<br>நேர்மை பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது ) | | 2,00,000 | 2,00,000 |
| | நேர்மை பங்கு முதல் அழைப்பு க/கு ப<br>நேர்மை பங்கு முதல் க/கு<br>( பங்கு முதல் அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 2,00,000 | 2,00,000 |
| | வங்கி க/கு ப<br>நேர்மை பங்கு முதல் அழைப்பு க/கு<br>( பங்கு முதல் அழைப்பு தொகை பெற்றது ) | | 2,00,000 | 2,00,000 |
| | நேர்மை பங்கு இறுதி அழைப்பு க/கு ப<br>நேர்மை பங்கு முதல் க/கு<br>( பங்கு மீதான இறுதி அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 1,00,000 | 1,00,000 |
| | வங்கி க/கு ப<br>நேர்மை பங்கு இறுதி அழைப்பு க/கு<br>( பங்கு மீதான இறுதி அழைப்பு தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |

( அல்லது )

27. ஆ)

<u>பரணி வரையறு நிறுமத்தின் 2017 மார்ச் 31 மற்றும் 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஒப்புநோக்கும் ஆண்டுக்குரிய வருமான அறிக்கை</u>

| விவரம் | 2016 - 2017 ₹. | 2017 - 2018 ₹. | தொகையின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) ₹. | சதவீதத்தின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) |
|---|---|---|---|---|
| விற்பனை மூலம் வருவாய் | 30,000 | 45,000 | + 15,000 | + 50 |
| <u>கூட்டுக</u> :இதர வருமானம் | 4,000 | 6,000 | + 2,000 | + 50 |
| மொத்த வருமானங்கள் | 34,000 | 51,000 | + 17,000 | + 50 |
| <u>கழிக்க</u> : செலவுகள் | 10,000 | 15,000 | + 5,000 | + 50 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 24,000 | 36,000 | + 12,000 | + 50 |
| <u>கழிக்க</u> : வருமான வரி (30%) | 7,200 | 10,800 | + 3,600 | + 50 |
| **வரிக்கு பின்னர் உள்ள இலாபம்** | **16,800** | **25,200** | **+ 8,400** | +50 |



B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com